**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண்.283 /2017**

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12-ம் நாள் செவ்வாய்கிழமை என்பவரது சாட்சியாகிய இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. வெ. பார்கவி B.A.,B.L.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 12.04.2022 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | கலையரசி (PW-1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | சமயம்: | |
| சாதி: | | வயது : | |
| தொழில்: | | | |

**முதல் விசாரணை: 12.04.2022**

நான் இவ்வழக்கின் முதல் வாதி ஆவேன். வாதி 2 முதல் 4 வாதிகள் என்னுடைய குமாரத்திகள். அவர்களுக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு வழக்கு விபரம் தொியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

இராஜசேகரன் எனது கணவர். 04.09.2015 தேதியிட்ட எனது கணவர்

இராஜசேகரனின் இறப்பு சான்றிதழின் உண்மை நகலை தாக்கல்செய்கிறேன். அதுவா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2016 முதல் 2017 வருடத்திற்கான எனது கணவா் இராஜசேகரன் பெயாில் உள்ள தாவாச்சொத்தில் உள்ள வீட்டிற்கு வீட்டுவாி செலுத்தியதற்கான வீட்டுவாி ரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 23.10.2017 தேதியிட்ட எனது கணவா்பெயாில் உள்ள மின் கட்டண ரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்குச்சொத்துக்களை வழக்கறிஞா் ஆணையா் பாா்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளாா். மேற்படி ஆணையா் தாக்கல் செய்த குறுந்தகடு மற்றும் புகைப்படங்களுடன் கூடிய (எண்ணிக்கை-10) அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆணையா் தாக்கல் செய்த வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடா்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**